முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1258

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.03.2023, வெள்ளிக்கிழமை

1. பிரபஞ்சம் காக்க வந்த பிரணவராஜனே
பிரணவப்பிரியன் என் மகாஅவதாரனே
சரவணச் சுடரேற்றி கலியுகத்தில்
சற்குருவாய் சகலருக்கும் ஞானம் அருளும்
2. அருளுகின்ற அரங்கனே ஞான தேசிகனே
அப்பனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
வரம்தந்து ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் மாசி மாதம் 26 ம் நாள், 10.03.2023, வெள்ளிக்கிழமை)
வழங்குவேன் சுபகிருது சால் திங்கள் தன்னில்
3. தன்னிலே அரங்கன் மகாசக்தி
தரணிஎங்கும் தர்மமாக பரவிவர
அன்னதான சேவையாற்றும் உலகோர்க்கு
அனைத்தும் ஆறுமுகன் என் சித்தியாக மாற்றங்காணும்
4. காணவே கலியுகத்தில் அரங்கன் பெயரை
கட்டாயம் ஜெபதபம் புரிபவர்க்கு
ஞானமதும் இலகுவாக சித்திக்கும்
ஞானபண்டிதன் என் அருளும் ஆற்றல்பட கிட்டும் என்பேன்
5. என்கவே உலகமாற்றம் நிகழ்த்தும் வண்ணம்
எங்கும் சரவணச் சுடரேற்றி
வல்லமைபட தர்மத்தை கையிலெடுத்து
வாரி வழங்கி உலகோர்க்கு தயவுகாட்டும்
6. காட்டுகின்ற அரங்கன் சன்மார்க்கமே
கலியுகத்தில் சிறந்த மார்க்கமாகும்
வாட்டமற உலகோர் இதனை தொடர்ந்து
வையகத்தில் தர்மத்தை அளவிலாசெய்து
7. செய்துமே அரங்கா முருகா என
ஜெபதபங்கள் நித்தம் கூட்டி
ஐயமற தொடர்ந்து வந்தால் போதும்
அகிலத்தில் பேரிடர் துன்பமில்லா அனைவருக்கும் பாதுகாப்பு நிலைகள் கூடி
8. கூடியே உலகை ஆளுகின்ற
குவலயத்தில் மகா சக்திகளும் ஞானவான்களாக
மாறுதல் கண்டு இந்த கலியுகம்
மகத்தான ஞான யுகமாக மாற்றம் பெறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–